செய்தி வெளியீடு எண்: 473 நாள் : 01.10.2015

# மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களின் அறிக்கை

திமுகவின் முதல்வர் வேட்பாளர் என்ற கற்பனைக் கனவில் மிதந்து, சொந்த அண்ணனால் மறுதலிக்கப்பட்டு மனம் உடைந்துபோய் தந்தையோடு கோபித்துக் கொண்டு, அந்த கோபத்தை வெளிக்காட்டும் வகையில் ஊர் ஊராக தேசாந்திரம் போய்க் கொண்டிருக்கும் மு.க.ஸ்டாலின், போகிற போக்கில் பொல்லாத கருத்துக்களைத் தூவியபடி போய்க் கொண்டிருக்கிறார்.

மகளிர் சுய உதவிக் குழுக்களை மேற்பார்வையிடும் சமுதாய சுய உதவிக் குழுப் பயிற்றுநர்களுக்கு கைபேசிகள் வழங்கப்படும் என்று அறிவித்து, அம்மா கைபேசி திட்டம் தொடங்கப்படும் என்று **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** சட்டமன்றப் பேரவையில் விதி 110ன் கீழ் அறிவித்ததை அடுத்து, தமிழகத்திலுள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களும் அவர்களது குடும்பத்தினரும் **மாண்புமிகு அம்மா அவர்கள்** மீது தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் விசுவாசத்தையும் காட்டியதைத் தாங்க முடியாமல், இத்திட்டத்தினை ஏளனப்படுத்தி, திட்டத்தின் கீழ் பயன்பெறும் மகளிரையும் கேவலமாகவும் பேசியிருக்கிறார், மு.க.ஸ்டாலின்.

மகளிர் சுய உதவிக் குழுக்களில் ஊக்குநராக செயல்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களை மேற்பார்வையிட்டு, புதிய குழுக்கள் அமைப்பதற்கும் பயிற்றுவிப்பதற்கும் துணை புரிகின்ற சமுதாய சுயஉதவிக் குழுப் பயிற்றுநர்களின் பணியை எளிமையாக்கி, அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் வகையில் அம்மா கைபேசிகள் வழங்கும் திட்டத்தை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** விதி 110ன் வாயிலாக சட்டமன்றத்தில் அறிவித்தார்கள்.

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் நடத்தும் கூட்டங்கள், சந்தா தொகை செலுத்துதல், சேமிப்பு, அவர்களுக்குள்ளான கொடுக்கல்–வாங்கல் உட்கடன் விவரங்கள், கடனை மீளச் செலுத்துதல் போன்ற நடைமுறைகள் குறித்து பதிவு செய்யவும், அவர்களது செயல்பாடுகளை மேற்பார்வையிடவும் தமிழ் மொழியில் சிறப்பு மென்பொருள் உருவாக்கி கணினி மயமாக்கப்பட்ட **அம்மா கைபேசிகள்** வழங்கப்படும் என்று **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** அறிவித்திருந்தார்கள்.

முதற்கட்டமாக, 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 20 ஆயிரம் சமுதாய சுய உதவிக்குழுப் பயிற்றுநர்களுக்கு அம்மா கைபேசி வழங்கப்படும் என்ற **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்**

விதி 110 அறிவிப்பைக் கேட்டு, எப்போதுமே **மாண்புமிகு அம்மா அவர்கள்** மீது பேரன்பு கொண்ட 6 லட்சத்திற்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 92 லட்சம் உறுப்பினர்களும் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்து **மாண்புமிகு அம்மா அவர்களை** நன்றியுடன் வாழ்த்திப் பாராட்டினர்.

மகளிருக்கு அதிகாரம் அளிக்கப்படுவதை ஒரு போதும் விரும்பாதவர் ஸ்டாலின். அதனால் தான், மகளிர் சுய உதவிக்குழு பயிற்றுநர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், அம்மா கைபேசி வழங்கும் திட்டத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் கேலியும் கிண்டலும் செய்து

‘சிம்கார்டு யார் கொடுப்பார்கள் ?’

சார்ஜர்களுக்கு மின்சாரம் யார் கொடுப்பார்கள் ?

ரீசார்ஜ் யார் செய்வார்கள் ?

என்று சிறுபிள்ளைத்தனமாகக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்.

சிம்கார்டு இல்லாமல் கைபேசி வேலை செய்யாது என்பதும் செல்போன் வழங்குவது என்றாலே சிம்கார்டும் சேர்ந்துதான் என்பதும், சிறு பிள்ளைக்குக் கூடத் தெரியும்.

இருந்தாலும், மு.க.ஸ்டாலின் போன்றவர்கள் சிறு பிள்ளைக்கும் கீழாக இப்படிக் கேட்கக் கூடும் என்பதால்தான், “**சிறப்பு மென்பொருளுடன் கூடிய கணினி மயமாக்கப்பட்ட கைபேசி**” என்று **மாண்புமிகு அம்மா அவர்கள்** தனது அறிவிப்பில் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி இருக்கிறார்கள்.

சிம்கார்டு இல்லாமல் எப்படி கணினிமயம் ஆகும் என்ற அடிப்படை சிந்தனையின்றி கேள்வி கேட்கும் ஸ்டாலினுக்கு இன்னொன்றும் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு அம்மா அவர்கள்** யானையே வாங்கித் தந்திருக்கிறார்கள், அதை கட்டுவதற்கு சங்கிலி வாங்கித் தராமல் போய் விடுவார்களா ? என்பதை சுய சிந்தனையுடன் ஸ்டாலின் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்**, கைபேசியுடன் சிம்கார்டையும் வழங்கி, சிறப்பு மென்பொருள் வாயிலாக சுய உதவிக் குழுக்கள் கூட்டம் நடத்துதல், உறுப்பினர் வருகை பதிவு செய்தல், சேமிப்பு, உட்கடன் வழங்குதல், கடன் திரும்பச் செலுத்துதல் போன்ற விவரங்களைப் பதிவு செய்து, தொடர்ந்து மேம்படுத்துவதற்கும் மற்றும் சிம்கார்டை ரீசார்ஜ் செய்தல், மாதாந்திர இணைப்புக் கட்டணம் ஆகியவற்றுக்கான செலவினத்தையும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் வழங்க வழிவகை செய்துள்ளார்கள். எனவே, இதைப் பற்றி மு.க.ஸ்டாலின் கவலைப்படத் தேவையில்லை.

கேட்டும் கொடுக்காதவர் கருணாநிதி. ஆனால் கேட்காமலேயே கொடுப்பவர் **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் !**

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கேட்காமலேயே அள்ளி அள்ளி வழங்கி வருபவர் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.**

கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில், அதன் ஐந்தாண்டு காலத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு **9,838 கோடி** ரூபாய் மட்டுமே வங்கிக் கடனாக வழங்கப்பட்டது. ஆனால் **மாண்புமிகு அம்மா அவர்களது** பொற்கால ஆட்சியில் கடந்த நான்காண்டுகளிலேயே, **20,270 கோடி** ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

மேலும், 2015–16 நடப்பு ஆண்டில் ரூ.6,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்படும் என்று விதி 110ன் கீழ் **மாண்புமிகு அம்மா அவர்கள்** அறிவித்திருக்கிறார்கள். இதில் 2,134 கோடி ரூபாய் அளவுக்கு தற்போது வழங்கப்பட்டும் விட்டது.

ஆக, **மாண்புமிகு அம்மா அவர்களின்** பொற்கால ஆட்சியில் ஐந்தாண்டுகளில் வழங்கப்படும் மொத்த கடன் அளவு 26,270 கோடி ஆகும். இது மைனாரிட்டி திமுக ஆட்சியில் வழங்கியதைவிட 267 விழுக்காடு அதிகம் ஆகும்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஐந்தாண்டுகளில், **73 கோடி** ரூபாய் மட்டுமே பெருங்கடன் வழங்கப்பட்டது கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியிலே **!**

ஆனால், நான்காண்டுகளிலேயே, **110 கோடி** ரூபாயை வங்கிப் பெருங்கடனாக வழங்கியது **மாண்புமிகு அம்மா அவர்களின்** பொற்கால ஆட்சியிலே **!**

இது மட்டுமல்ல, மகளிர் சுய உதவிக் குழுக்களை மேம்படுத்தவும், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்க்கை நலம் மேம்படுத்தி வளம் சேர்க்கவும், பல புதுமைத் திட்டங்களை **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** செயல்படுத்தி வருகிறார்கள்.

**மாண்புமிகு அம்மா அவர்களின்** ஆணைப்படி, மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை இளைஞர்கள் மத்தியில் பிரபலப்படுத்தி, விற்பனையை அதிகரிக்கும் வகையில், கடந்த நான்காண்டுகளில் 443 கல்லூரி சந்தைகள் நடத்தப்பட்டு, 6.27 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. நகரப்பகுதிகளில் 87.50 கோடி ரூபாய் செலவில் மதி அங்காடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**மாண்புமிகு அம்மா அவர்கள்** ஆணையிட்டவாறு மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலமாக, 1 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் 30 பிளாஸ்டிக் கழிவுகள் மறு சுழற்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, 577 டன் பிளாஸ்டிக் துகள்களைக் கொண்டு 998 கி.மீட்டர் நீளச் சாலை அமைத்ததில் ரூ.169 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை வங்கி முகவர்களாக நியமித்திட **மாண்புமிகு அம்மா அவர்கள்** ஆணையிட்டவாறு 3,716 சுய உதவி குழு உறுப்பினர்கள் வங்கி முகவர்களாக நியமிக்கப்பட்டு அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இப்படிக் கேட்காமலேயே **மாண்புமிகு அம்மா அவர்கள்** மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அள்ளி அள்ளித் தருவதால், அவர்களுக்கு குறைகள் என்று எதுவுமில்லை. **மாண்புமிகு அம்மா அவர்களை** வாய் நிறைய வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மு.க.ஸ்டாலின் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த சட்டமன்ற தேர்தலின்போது வெளியிடப்பட்ட கழக தேர்தல் அறிக்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 10 இலட்சம் ரூபாய் கடனுதவியும் அதில் 25 சதவீதம் மானியமும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் ஆனால் இதுபோல வழங்கப்படவில்லை என்றும் குறை கூறியிருக்கிறார் ஸ்டாலின்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க ஆட்சியில் உள்ளாட்சித் துறை அமைச்சராக, மகளிர் சுய உதவிக் குழுக்களை தன் பொறுப்பிலே வைத்திருந்த மு.க.ஸ்டாலின் தொடர்ந்து மகளிர் சுய உதவிக் குழுக்களை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், மத்திய அரசு இத்திட்ட நடைமுறைகளில் ஏற்படுத்தும் மாற்றங்களை சற்றும் அறியாதவராக இருக்கிறார். இதுபோன்ற முக்கிய பிரச்சனைகளில் மு.க.ஸ்டாலின் உடனுக்குடன் தெரிந்து கொள்ள இயலாதவராக கருத்தை வெளியிட்டுள்ளார்.

2011–12 ஆம் ஆண்டு வரையில் நடைமுறையில் இருந்த SGSY திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களுக்கு 25 சதவீத மானியத்துடன் கூடிய பொருளாதார கடன் உதவி வழங்கப்பட்டு வந்தது. ஆனால் அந்த ஆண்டின் முடிவில் இத்திட்டம் மத்திய அரசால் மாற்றி அமைக்கப்பட்டது. தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் என்னும் புதிய திட்டம் உருவாக்கப்பட்டு சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் உதவிகளை மாற்றி, சீரமைத்து புதிய ஆணைகளை வெளியிடப்பட்டன.

இதன்படி ஏற்கெனவே வழங்கப்பட்ட மானியத்துடன் கூடிய கடன் உதவிக்கு பதிலாக, சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி / சுழல் நிதியாக குழு ஒன்றுக்கு ரூ.15,000/– வீதமும் சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.75,000 வீதமும் நலிவுற்றோர் துயர் நீக்கு நிதியாக ஒரு ஊராட்சிக்கு 1.50 இலட்சம் ரூபாயும் வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால்** தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு ஒரு ஊராட்சிக்கு குறைந்தபட்சம் ஒன்று என்ற வகையில் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வறுமை ஒழிப்பு சங்கத்திற்கும் மூன்று தவணைகளில் 4 இலட்சம் : 4 இலட்சம் : 2 இலட்சம் ரூபாய் என்ற விகிதத்தில் ரூ.10 இலட்சம் 100 சதவீதம் முழு அரசு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் கடந்த நான்கு ஆண்டுகளில் **மாண்புமிகு அம்மா அவர்கள்** கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு 413.13 கோடி ரூபாயை முழு மானியமாக வழங்கியுள்ளார்கள்.

இது தவிர சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவி செய்ய, ஒவ்வொரு ஊராட்சியிலும் அமைக்கப்பட்டுள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 466.76 கோடி ரூபாய் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால்** 100 சதவீத முழு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** சுய உதவிக் குழுக்களுக்கு உதவும் பொருட்டு, கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் 879 கோடியே 89 லட்சம் ரூபாயை முழு அரசு மானியமாக வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வழங்கியுள்ளார்கள்.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது** அரசு, தேர்தல் அறிக்கையில், சுய உதவிக் குழுக்களுக்கு 25 சதவீதம் மானியத்துடன் 10 இலட்சம் ரூபாய் கடன் உதவி அளிக்கும் என்ற வாக்குறுதியையும் தாண்டி மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்ட வறுமை ஒழிப்பு சங்கங்களை குறைந்தபட்சம் ஊராட்சிக்கு ஒன்று என புதிதாக உருவாக்கி 100 சதவீத மானியத்துடன் அதாவது 10 இலட்சம் ரூபாய் முழு தொகையும் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது என்பதை ஸ்டாலின் தெரிந்து கொள்ளவேண்டும்.

செல்போன் சார்ஜருக்கு மின்சாரம் யார் தருவார்கள் என்றும் கேட்கிறார் ஸ்டாலின்.

மின்வெட்டால் மக்கள் தத்தளித்ததும், மின்சாரம் எப்போது வருமோ என்று இல்லத்தரசிகளும், மாணவர்களும், தொழிலாளர்களும், தொழில் முதலீட்டாளர்களும் ஏங்கித் தவித்ததும் மைனாரிட்டி திமுக ஆட்சியில் !

ஆனால், **மாண்புமிகு அம்மா அவர்கள்** நான்காண்டுகளில் செயல்படுத்திய ஏற்றமிகு மின் திட்டங்களால், மின்தட்டுப்பாடு என்ற நிலையிலிருந்து மீண்டு, மின்மிகை மாநிலம் என்ற நிலை நோக்கி வீறு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது தமிழகம்.

தமிழகத்தின் தாய்மார்களும், பொது மக்களும் விரும்பிய வண்ணம் மைனாரிட்டி திமுகவினர் ஏற்படுத்திய மின்வெட்டை நீக்கி அனைவரது இல்லங்களிலும் ஒளி ஏற்றி வைத்தவர் **மாண்புமிகு அம்மா அவர்கள்.**

எனவே, மின்சாரம் யார் கொடுப்பார்கள் என்ற கவலை ஸ்டாலினுக்கு வேண்டாம்.

உங்களால் மின்சாரம் தரமுடியாது என்பதை மக்கள் அறிந்துதான் உங்களை வீட்டுக்கு அனுப்பி விட்டு **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை** அரியணையில் அமர்த்தி இருக்கிறார்கள் என்பதை மு.க.ஸ்டாலினுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, நோக்கியா நிறுவனத்தை மூடிவிட்டு, வேறு நிறுவனத்திடம் கமிஷன் பெறவே இத்திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று உள்நோக்கத்துடன் அவதூறு பேசியிருக்கிறார் ஸ்டாலின்.

2005ம் ஆண்டில் தமிழகத்தில் நோக்கியா நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதற்கு முக்கிய காரணமே **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** தான்.

ஆனால், கடந்த மைனாரிட்டி திமுக அரசின் துணையுடன், மத்தியில் இருந்த காங்கிரஸ் கூட்டணி அரசு பிறப்பித்த முன்தேதியிட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட நிதிச் சட்டம் 2012ல் கொண்டு வரப்பட்ட திருத்தங்களின்படி, முன்தேதியிட்டு கணினி மென்பொருள்களுக்கு வழங்கப்படும் தொகை ராயல்டி வருமானமாக கருதப்படும் என அறிவித்ததால்தான் நோக்கியா நிறுவனம் மூடப்பட்டது, இதற்கு மத்தியில் ஆண்ட காங்கிரஸ் அரசில் அங்கம் வகித்த திமுக தான் காரணம் என்பது மக்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

மேலும், கமிஷன் பெறுவதும், கலெக்ஷன் செய்வதும், கரெப்ஷன் ஆவதும், திமுகவின் ரத்தத்தில் ஊறிய ஒன்று. விஞ்ஞான முறையில் ஊழல் செய்தார் என சர்க்காரியாவால் சான்றிதழ் பெற்றது தொடங்கி, 2ஜி ஸ்பெக்ட்ரம் 1,76,000 கோடி ரூபாய் முறைகேடு எனத் தொடர்ந்து, கலைஞர் டிவிக்கு 200 கோடி ரூபாய் கையூட்டு வாங்கியது வரை திமுகவின் ஊழல் வரலாறு இதைத் தெளிவாக எடுத்துக் காட்டும்.

எனவே, கழக அரசு மீது குறை சொல்ல ஸ்டாலினுக்கு எந்த அருகதையும் இல்லை என்பதை அறுதியிட்டு உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைய தினம் செல்போன்கள் நரிக்குறவர்களிடம் இருக்கிறது, குப்பை அள்ளுவோரிடம் இருக்கிறது, பிச்சைகாரர்களிடம் இருக்கிறது, ஆடு மாடு மேய்ப்பவர்களிடம் இருக்கிறது என்று பேசியிருக்கிறார் மு.க.ஸ்டாலின்.

**மாண்புமிகு அம்மா அவர்களின்** திட்டத்தைக் குறை கூற வேண்டும் என்பதற்காக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களையும், மற்றவர்களையும் கேவலப்படுத்தி இருக்கிறார் ஸ்டாலின்.

**மாண்புமிகு அம்மா அவர்கள்** செயல்படுத்தும் திட்டங்களால் தன்மானத்துடன் சுய மரியாதையோடு வாழ்க்கை நடத்தும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை பிச்சைக்காரர்களுடன் ஒப்பிட்டு பேசி கேவலப்படுத்தியுள்ள ஸ்டாலினுக்கு தக்க பாடம் புகட்ட அவர்கள் தயாராக உள்ளார்கள் என்பதை மு.க.ஸ்டாலினுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

14 ஆண்டு காலம் மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது திமுக. மைனாரிட்டியாக இருந்தாலும், மீனுக்கு தலையும், பாம்புக்கு வாலும் காட்டுவது போல, கூட்டணிக் கட்சிகளை ஏமாற்றி ஐந்தாண்டு காலம் தமிழ்நாட்டில் ஆட்சியை பிடித்துக் கொண்டிருந்தது திமுக.

ஆனால், தமிழகத்தின் உரிமைகளைக் காக்க வேண்டும் என்றோ, தமிழக மக்களின் வாழ்க்கையை வளப்படுத்த வேண்டும் என்றோ ஒரு போதும் எண்ணியதில்லை திமுக.

காவேரிப் பிரச்சினையில் கோட்டைவிட்டது திமுக. முல்லைப் பெரியாறு பிரச்சினையில் முடங்கி கிடந்தது திமுக. என்எல்சி பிரச்சினையில் சிந்தனையே செலுத்தாதது திமுக. மீனவர் பிரச்சினையில் உறங்கிக் கிடந்தது திமுக.

ஆனால், காவேரியிலும், முல்லை பெரியாரிலும், என்எல்சியிலும், மீனவர் பிரச்சினையிலும் நீதிமன்றத்திலும், மத்திய அரசோடும் போராடி தமிழகத்தின் உரிமையை மீட்டதும், தமிழர்களின் நலனைக் காத்ததும் **உலகத் தமிழர்களின் ஒப்பற்ற ஒரே தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் தான்** என்பதையும் தமிழக மக்கள் மிக நன்றாகவே அறிவார்கள்.

தமிழர்களின் உரிமைப் பிரச்சினைகளிலும் வாழ்வாதாரப் பிரச்சினைகளிலும் துளிக் கூட அக்கறையின்றி இருந்த முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சியின் முதல்வர் கருணாநிதிக்கும் துணை முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கும் தேர்தல் நெருங்க நெருங்க தமிழக மக்கள் மீது பாசம் பொங்கி வழிகிறது, நேசம் வழிந்து பொங்குகிறது.

மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலமெல்லாம் மக்கள் பிரச்சினைகளில் கும்பகர்ணத் தூக்கம் தூங்கிக் கிடந்த ஸ்டாலின், கடந்த நாலரை ஆண்டு காலம் மக்கள் சிந்தனையே இல்லாமல் உறங்கி கொண்டிருந்த ஸ்டாலின், இப்போது திடீரென முழிப்பு வந்து உச்சிப் பொழுதில் விடியலைத் தேடி ஊர் ஊராய் போய் கொண்டிருக்கிறார்.

ஸ்டாலினின் செயல் திட்டமெல்லாம் ஒன்றே ஒன்று தான். எப்படியாவது பதவியை கைப்பற்ற வேண்டும், அதற்கு என்ன வேண்டுமானலும் செய்யலாம் என்பது தான் அந்த செயல் திட்டம்.

இந்த பகற் கனவை நனவாக்கி விடலாம் என்ற நப்பாசையுடன், மகுடியின் இசைக்கு பாம்பு படம் எடுத்து ஆடுவது போல, ‘‘ஸ்டாலினை தூக்கி நிறுத்தும் குழு’’ (Stalin Promotion Team) சொல்லுவதற்கெல்லாம் தலையாட்டிக் கொண்டிருக்கிறார் ஸ்டாலின்.

நமக்கு நாமே என்று நடைப் பயணம் நடத்துவதும், பயணம் வருகின்ற வழிகளில் டீக்கடைகளில் ஏற்கெனவே எழுதி வைத்த நாடகத்தை அரங்கேற்றுவதும், தனது கட்சிக்காரப் பெண்களை வைத்து மகளிர் சுய உதவிக் குழுக் கூட்டம் நடத்துவதும், தனது கட்சிகாரர்களுக்கு பச்சைத் துண்டு வாங்கிக் கொடுத்து, ஏதோ விவசாயிகள் போல கூட்டம் நடத்துவதும், இதில் எல்லாம் ஏதோ எதேச்சையாகப் போய் பேசுவது போலவும் ‘‘ஸ்டாலின் தூக்கி நிறுத்தும் குழு’’வின் கட்டளைகளின்படி மறுபேச்சு பேசாமல் நடித்துக் கொண்டிருக்கிறார் ஸ்டாலின்.

ஆஸ்கார் விருது பெறும் வகையில், ஸ்டாலின் நடிக்கின்ற இந்த நகைச்சுவை நடிப்பைப் பார்த்து தமிழக மக்கள் மிக நன்றாகவே ரசித்து சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

‘‘ஸ்டாலின் தூக்கி நிறுத்தும் குழு’’வின் ஆணையை ஏற்று, 62 வயதான ஸ்டாலின், ஏதோ தன்னை ஒரு இளைஞரைப் போல வண்ண வண்ணச் சட்டைகள் அணிந்து அதை கால் சராய்க்குள் விட்டுக்

கொண்டு, வேடம் போடுவதன் மூலம் மக்களின் மனதைக் கவர்ந்து விட முடியாது. ஒரு போதும் மக்களை ஏமாற்றவும் முடியாது.

**இந்திய திருநாடே வியக்கும் வகையில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி, 2,42,160 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, 4,70,065 பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி, இளைய சமுதாயத்திற்கு நம்பிக்கையும், மகிழ்ச்சியும் வழங்கியுள்ள மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை** இளைய சமுதாயத்தின் எழுச்சித் தலைவராக தமிழகத்தின் இளைஞர்கள் போற்றிக் கொண்டிருக்கிறார்கள். பொது மக்கள் அனைவரும் மனதார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

மகளிர் சமூகத்தின் அன்பையும், இளைய சமுதாயத்தின் மதிப்பையும், ஒட்டு மொத்த தமிழக மக்களின் ஆதரவையும் பெற்றுள்ள **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** மக்கள் செல்வாக்கை ஸ்டாலினின் சிறு பிள்ளைத்தனமான கேள்விகளால் அசைத்து விட முடியாது. மக்கள் மனதிலிருந்து **மாண்புமிகு அம்மா அவர்களை** ஒருக்காலும் அகற்றிவிட முடியாது.

கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் திமுகவிற்கு முட்டையும், **மாண்புமிகு அம்மா அவர்களுக்கு** 37 தொகுதிகளில் மகத்தான வெற்றியும் மக்கள் பரிசாக தந்தார்கள். அதே போல எதிர்வரும் 2016ம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தலிலும், **மாண்புமிகு அம்மா அவர்கள்** செயல்படுத்தி வரும் மக்கள் நலத் திட்டங்களால் நிச்சயமாய் திமுகவிற்கு முட்டையும், **234 தொகுதிகளிலும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மகத்தான வெற்றியையும் மக்கள் பரிசாக அளிப்பார்கள். இது உறுதி.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**